# நாலடியார் மற்றும் திருக்குறள் ஒப்பீடு

**ஜெ.ரா.நிலா - 2140285**
**4CMS - TAM421**

தமிழகத்தில் சங்கம் மருவிய காலத்தில் இயற்றப்பட்ட 18 நூல்களைச் சேர்த்து பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு புத்தகமும் வெவ்வேறு புலவர்களால் பாடப்பட்டது. நாலடியார் மற்றும் திருக்குறள் ஆகிய இரண்டும் பதினேன் கீழ்கணக்கு நூல்களின் கீழ் வரும்.

**'நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி'**
**'பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்.'**

இந்த இரண்டு தொடர்களும் நாலடியாரின் பெருமையையும் திருக்குறளின் சிறப்பையும் நன்கு காட்டுவன. குறள் வெண்பாக்களால் ஆகிய நூலுக்குக் 'குறள்' என்ற பெயர் ஏற்பட்டாற்போல, நாலடி வென்பாக்களாலாகிய இந்நூலிற்கும் 'நாலடி' எனும் பெயர் அமைந்தது. திருக்குறள் குறள் வெண்பா என்னும் பாவகையினாலான 1,330 ஈரடிச் செய்யுள்களைக் கொண்டது. நாலடியார் 400 தனிப்பாடல்களைக் கொண்டுள்ளது. திருக்குறள், கருத்துக்களைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறது. நாலடி, விளக்கமாகவும் இனிதாகவும் அனைவருக்கும் புலனாகுமாரும் எடுத்துச் சொல்லுகிறது. திருக்குறளின் விளக்கம் போல் இந்த நூல் போற்றப்பட வேண்டியதாகும். அதனைக் கற்பதற்கு முன் கற்கப்பட அடிப்படை நூலுமாகும்.

உலகப் புகழ்பெற்ற தமிழ் இலக்கியங்களில் திருக்குறளே முதன்மையானதாகும். இதனை இயற்றிய திருவள்ளுவர் 1330 குறள்களை பத்து பத்தாக 133 அதிகாரங்களில் தொகுத்துள்ளார். இது அடிப்படையில் ஒரு வாழ்வியல் நூலாகும். அகவாழ்விலும் புறவாழ்விலும் மனிதன் இன்பமுடன் வாழ தேவைப்படுகின்ற அடிப்படை பண்புகளை

விளக்கப்படுத்துவனவாக விளங்குகிறது. திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தார். அவர் இன்றுள்ள வாழ்க்கையை எவ்வாறு விளக்க முடியும் என்று வினவலாம். காலம் மாறினாலும் உண்மைகள் மாறுவதில்லை என்பதற்கு திருக்குறள் ஒரு சான்று. வள்ளுவரின் வாழ்க்கையின் அடிப்படையாகவும் பொதுவாகவும் உள்ள உண்மைகளைக் கண்டு எழுதியுள்ளமையால் பல்வேறு காலத்தவரும் நாட்டவரும் போற்ற முடிகின்றது. அவ்வாறு போற்றும்போது தம் காலத்திற்கேற்றவாறு அவற்றை உணர்கின்றனர்.

வடநாட்டுப் பஞ்சம் நீங்கியதும், அவர்தம் நாடு திரும்ப விரும்பவும், பாண்டியன் அவர்களைப் பிரிய மனமின்றி விடைகொடாது காலந்தாழ்த்தினான். ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாடல் எழுதித் தம் காணிக்கையாகப் பாண்டியனுக்கும் தமிழுக்கும் வைத்து விட்டு யாரும் அறியாமலே தம் நாடு சென்று விட்டனர். செய்தியறிந்த பாண்டியன் பெரிதும் வருத்தம் அடைந்தான். அந்த ஏடுகளை வைகையிலே எறிய ஆணையிட்டான். அவற்றுள் வெள்ளத்தை எதிர்த்து வந்த ஏடுகள் 400. அவையே நாலடி நானூறாகத் தொகுக்கப் பெற்றன. போற்றிப் பேணப் பட்டன. இத்தகைய ஒப்பற்ற நூலுக்கு பால் இயல் அதைகாரம் முறைமையும், தக்கதோர் உரையையும் கண்டவர் பதுமனார்.

உலகில் மக்களாயப் பிறந்தார்க்கு அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கும் உறுதிப் பொருள்களென உயர்ந்தோரால் எடுத்தோதப்படும். அவற்றுள் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றையும் திருக்குறள் தெள்ளத் தெளிவாக விளக்குகின்றது. குறளை அடுத்து நாலடியும் இம்மூன்று கருத்துகளையும் விரிவாக விளக்குகின்றது. அவற்றுள் முதலாவதான அறம் பற்றிய கருத்துக் குறளிலும் நாலடியிலும் ஒத்த நிலையில் காணப்படுகிறது. இங்கு அறம் என்னும் பொருளை ஆசிரியர் இல்லறம், துறவறம் என வகுத்து கூறியுள்ளார்.

### இல்லற மாண்புகள்

அறம் என்பது அன்பின் அடியாகத் தோன்றும் அருளை உணர்த்துவதாகும். அறப் பணிகள் அனைத்தும் அருட்பணிகளேயாகும்.

அறத்தைச் சான்றோர்கள் இல்லறம் துறவறம் என இருவகையாக வகுத்துச் சென்றுள்ளனர்.

இல்லறம் என்பது ஒருவன் மனைத்தக்க மாண்புடையாளை மனையாளாகக் கொண்டு நல்லெழுக்க நெறி நின்று அறவோர்க்களித்தல், அந்தணர் ஓம்பல், துறவோர்க் கெதிர்தல் போன்ற நல்லறப் பண்புடையாளர்களாய் திகழ்ந்து இனிது வாழ்தலாகும். இல்லறமே அருள் நெறியின் - அறப்பணியின் தொடக்கமாகும். இல்லறம் பேணாதவர் உலகில் அறம் போற்றல் இயலாது என்பது வள்ளுவர் நெறியால் விளங்குகின்றது. இல்லத்தில் அருள் நெறியையும் அதன் பயனாகிய அறப்பணியையும் பயின்றும் தோந்த பின்னரே, பற்றற்ற துறவினை மேற்கொள்ளல் வேண்டும் என்பது

வள்ளுவர் காட்டும் வழியாகும். இல்லறம் பேணாது துறவறம் பூணல் என்பது உலகியலுக்கு ஒவ்வாத ஒன்றாம். பேரின்ப வீட்டுக்கு வழி காட்டும் இல்லறத்தைச் சான்றோர்கள் பெரிதும் மதித்துப் போற்றி வாழ்ந்து சென்றுள்ளனர். இதனையே வள்ளுவரும் “அறன் எனப் பட்டதே இல்வாழ்க்கை” என்றும் “இல்லறம் அல்லது நல்லறமன்று” என்றும் பலபடப் போற்றியுரைத்துள்ளனர். வள்ளுவரும் முதற்கண் இல்லறத்தை வைத்து பின்னர் துறவறத்தை அமைத்து அறத்துப்பால் இயற்றியுள்ளமையும் இக்கருத்தினை வலியுறுத்துகின்றது ஆனால் நாலடியார் அதற்கு மாறாக கடவுள் வாழ்த்தை அடுத்து துறவற இயலையும் அதற்கு அடுத்து இல்லறவியலையும் அமைத்துள்ளமை ஒப்பு நோக்கத்தக்கது. சமணர்கள் துறவறத்தையே உயர்ந்தது என்று கருதுகின்றவார்கள். ஆயினும் இல்லறத்தில் இருந்து கொண்டும் நன்மை செய்ய முடியும் என்ற உண்மையையும் அவர்கள் மறுக்கவில்லை. ஆகவே துறவறத்தை அடுத்து இல்லறவியலை அமைத்துள்ளனர்.

திருக்குறள் இல்லறவியல் என்னும் தலைப்பில் 20 அதிகாரங்களில் இல்லறத்தின் சிறப்பினை எடுத்துக் கூறுகிறது. திருக்குறளைப் போன்றே அறம், பொருள், இன்பம் என்னும் கூறும் நாலடியாரும் இல்லறவியலில் 6 அதிகாரங்களில் இல்லறத்தின் சிறப்பினை இயம்புகிறது. அவற்றுள்

பொதுவாக திகழ்பவை பொறையுடைமை, பிறர்மனை, விழையாமை, தீவினையச்சம், ஈகை என்பனவாகும்.

**பொறையுடைமை**

இல்வாழ்க்கை நடத்துவோருக்கு அமையவேண்டிய இன்றியமையாத பண்பு பொறுமையாகும். ஆகவேதான் நாலடியும் இல்லறவியலில் பொறையுடைமையை முதன்மைப்படுத்தியுள்ளது. பொறுமை உடையவனின் இல்வாழ்க்கை தான பெருமை மிக்கதாக இருக்கக்கூடும். எனவே தான் சான்றோர்கள் "பொறுமை கடலினும் பெரிது" என்றார்கள். வள்ளுவப் பெருந்தகையும்,

**"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**

**இகழ்வார்ப் பொறுத்தல் தலை"**

என மொழிந்துள்ளார். நாலடியம் அதே கருத்தை முன் வைக்கிறது.

**"நேரல்லார் நீரல்ல சொல்லியக்கால் மற்றது**

**தாரித் திருத்தல் தகுதி; மற்று - ஓரும்.**

**புகழ்மையாக் கொள்ளாது பொங்குநீர் ஞாலம்**

**சமழ்மையாக் கொண்டு விடும்"**

நல்ல குணமில்லாதவர்கள் நன்மையற்ற சொற்களைக் கூறும் போது அச்சொற்களைப் பொறுத்து கொண்டிருப்பதே ஏற்றதாகும். அச்சொல்லை நினைத்து பதில் கூறத் தொடங்கினால் இவ்வுலகம் அதனை புகழுடைய செயலாகக் கொள்ளாது. பழிக்குக் காரணமான செயலாகக் கொண்டுவிடும்.

**வறியவர்க்கு உதவுதல்**

வறியவர் துயர் கண்டபோது மனமிரங்கி உதவும் தன்மை இல்லத்தானுக்கு வேண்டும் என்பதை குறளும் நாலடியும் வலியுறுத்துகிறது. வாழ வழியற்று இருக்கும் வறியவர்களுக்கு

உதவுவதே சிறந்தது ஆகும். "வறியார்க்கொன் றீவதே ஈகை" என்கிறார் வள்ளுவர்.

**"கொடையொடு பட்ட குணன்உடை மாந்தர்க்கு**

**அடையாவாம் ஆண்டைக் கதவு"**

பொருள் இல்லாத போதும் தம்மால் முடிந்த அளவு மிகவும் மன மகிழ்ச்சியுடன் கொடைத் தன்மையோடு கொடையளிப்போர் சொர்க்கத்தை அடைவர் என்கிறது நாலடி. இதனையே வள்ளுவரும் வறியவர்க்குப் பொருள் கொடுத்து வாழ வைப்பதால் மேலுலகம் கிட்டும் என்கிறார்.

பிறருக்கு உதவி செய்யாமல் வாழ்பவர் உயிருடன் வாழ்பவராயினும் செத்தவராகவே கருதப்படுவர் என்றும் வறுமை உடையவருளுக்குப் பொருள் கொடுக்க முடியாத பொழுது இறந்து விடுதலே இனிமை உடையது என்றும் வள்ளுவனார் வகுத்துள்ளார்.

**"வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாம்**

**குறி யெதிர்ப்பை நீர துடைத்து"**

வறியார்க்குக் கொடுப்பதே ஈகை என்ற கருத்தை குறள் விளக்குகிறது.

**"ஏற்றகை மாற்றாமை என்னானும் தாம் வரையார்**

**ஆற்றாதார்க் கீவதாம் ஆண்கடன்"**

ஒன்றுமில்லாத ஏழை எளியவர்க்குக் கேட்பதைக் கொடுப்பதே ஈகை ஆகும். மற்றவர்களுக்குக் கொடுப்பது கடனாகும். இதனை நாலடியார் கொழுத்த கடன் என்கிறார்.

மேலும் பிறருக்கு உதவி செய்ய முடியாவிட்டாலும், வறுமை காரணமாக மற்றவர்களிடம் பிச்சை கேட்காமலிருத்தல் பெரும் பயனைத் தரும். இதனையே குறளும்

**"நல்லா றெனினும் கொளல் தீது மேலுலகம்**

**இல்லெனினும் ஈதலே நன்று”** என்கிறது

இக்கருத்தையே நாலடியும் வலியுறுத்துகிறது.

**- - - - வறுமையால்**

**ஈதல் இசையாது எனினும் இரவாமை**

**ஈதல் இரட்டி உறும் என்கிறது.**

**ஈயென இரத்தல் இழிந்தன்று - - - -** எனும் புறநானூற்று பாடல் வரியும் இதனையே உணர்த்துகிறது. வறியவர்களுக்குப் பொருள்களை ஈதலால் மேயூலகம் கிட்டுவதோடன்றி இம்மையில் மனிதன் பெற வேண்டிய புகழும் உண்டாகின்றது. புகழ் உண்டாகும் வழியே வறியவர்களுக்குப் பொருளைக் கொடுப்பதுதான்' உலகில் அழியாது நிலைபெறுவதும் புகழ்தான் என்ற குறளின் கருத்தை நாலடியும் கூறுகிறது. பெரியோர்களால் கொடையாளி என்று பாராட்டப்படும் சொல், உலகம் முழுவதும் பரவிப் புகழை நிலைநிறுத்தும் என்பதாகும்.

**தீய செயல்களைச் செய்ய அஞ்சுதல்**

புலால் உண்பது தீய செயல் என்றும் புலால் உண்பவர்கள் அறிவற்றவர்கள் என்கிறது நாலடியார். தீவினை ஒரு பாவச் செயல், அதனை சான்றோர் செய்ய அஞ்சுவர். கொடியவர்கள் அஞ்சாது செய்வர். தீய செயல்கள் துன்பத்தைத் தருவதால் அவை தீயை விட பெரிதும் அஞ்சத்தக்கதாகும். ஆகவே தீயை விடக் கொடியது தீயச் செயலாகும். பிறருக்குத் தீங்கு செய்பவன் தவறாமல் மறுபிறப்பில் தான் செய்த தீவினையை அனுபவிப்பான் என்பன போன்ற கருத்துக்களை கூறுகின்றன.

இவ்வாறு இல்லறம் சார்ந்த கருத்துக்கள் குறளிலும் நாலடியிலும் பெரும்பான்மையாக ஒத்த நோக்கில் காணப்படுகிறது. இவ்விரு நூல்களும் உயிர்கள் இப்படி பிறந்து இறந்து உழல்கின்ற காலத்து, அவைதம் உயிருக்கு உறுதியளிக்கும் நிலையான பேரின்பத்தை அடைய, அருள் செய்யும் பெருங்கருணையும் தலைமயும் உடையவனாக 'விளங்குபவன்' பேரறிவுப் பொருளாகிய ஒருவனே! அவன் 'உள்ளான்' என்பதை உணரவும், அவனுடைய அருளைப் பெறுவதற்கான நன்னெறிகளை அயராது ஈடுபடவும் கூடிய ஆற்றலுடையதும், இந்த மனித பிறவிதான் என்பதையறிந்து வாழ்க்கை வாழும் விதத்தைப் பற்றி மிகவும் துள்ளியமாக எடுத்துரைக்கிறது. இந்நூல்கள் அறம், பொருள், இன்பம் என்ற வாழ்க்கைக்குத் தேவையான பால் முறை, அதிகார முறை இயல்முறை எனவெல்லாம் வகுத்து முறைப்படுத்தி, நூலின் பொருளினை விளக்குவதாக அமைந்த உரையாக வகுக்கப்படுகிறது.